IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# சங்க இலக்கியமும் ஜப்பானிய மன்யோசு காதற்பாடல்களும் தமிழ் மொழியும் ஜப்பானிய மொழியும்:

**முனைவர் வா.மு.சே.முத்துராமலிங்க ஆண்டவர்**

முதல்வர்

கொ.கந்தசாமி நயுடு ஆடவர் கல்லூரி

அண்ணாநகர் கிழக்கு,

சென்னை-108

சுசுமு. ஓனோ என்ற தமிழறிஞர் (23.8.1919-14.01.2008) ஜப்பானிய மொழிக்கும் தமிழ் மொழிக்கும் தொடர்புண்டு என்ற கருதுகோளினை முன் வைத்தவர். அவரின் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடும் நாம் தமிழுக்கு அவர் செய்த அளப்பரிய ஆய்வினை என்றும் நினைத்துக் கொண்டே இருக்க வேண்டும். திராவிட மொழிகளின் மூத்த மொழியான இலக்கண இலக்கிய வளமுடைய தமிழ்மொழி பண்பாட்டு இலக்கியத்தோடு ஜப்பானிய மொழி இலக்கண பண்பாட்டு ஆய்வுகளைத் தொடங்கியவர் இவரே, இவருக்கும் முன்பே திராவிட மொழிக்கும் யப்பானிய மொழிக்கும் உறவு உண்டென சுசுமு ஷிபா (1974) அசிர புஜிவர (1974, 1975, 1976,1981) மினொருகோ (1977, 1980) ஆகிய ஜப்பானிய அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர், கால்டுவெல் அவர்கள் திராவிட மொழி ஒப்பிலக்கணத்தில் இதனைச் சுட்டிச் செல்கிறார்.

| தமிழ் மொழி | ஜப்பானிய மொழி |
|---|---|
| இரு | அரி, இரி, ஒரி, உரி |
| கரு | குரோ, குரொஇ |
| பர | பரு (baru) ஹரு |
| பழ | புருஇ (burui) புருஇ (furui) |

**சங்க இலக்கியங்களும் உலக இலக்கியங்களும்**

சங்க இலக்கியங்கள் உலக இலக்கியங்களோடு ஒப்பிடக்கூடிய பெருமதி உடையவை. இந்திய மரபில் சங்க இலக்கியத்தைப்போன்றே பிராகிருத இலக்கியங்களான ஆந்திர நாட்டு

அகநானூறு எனப் போற்றப்படும் இலக்கியங்களை பன்மொழிப் புலவர் மு.கு.ஜெகன்நாதராசா, காதா சப்தசதி என மொழிபெயர்த்துள்ளார். கா சங்க இலக்கியத்திலுள்ள திணை வரையறை சிறந்ததை மட்டும் தொகுக்கும் மரபு அகத்திணைக்கு இருப்பதுபோல் அங்கே இல்லை. இந்திய அக இலக்கியங்கள் அனைத்தையும் ஒருங்கே பார்த்தாலும் சங்க இலக்கிய அகத்திணை நெறி தனிச் சிறப்பு உடையதாக விளங்குகிறது. சங்க இலக்கியங்களை உலகச் செம்மொழிகளான கிரேக்கம், ரோமானியம், சீனம், ஜப்பானியம் போன்ற இலக்கியங்களோடு ஒப்பிட்டு கைலாசபதி அவர்கள் இரண்டு இலக்கியங்களில் இருக்கின்ற வாய்மொழிப் பண்புகளை தமிழ் வீரயுகப் பாடல்கள் (Tamil Heroic Poery) என ஆய்ந்து தன் கருத்துக்களை வெளியிட்டார்.

**சங்க ஜப்பானிய ஒப்பீடு**

இத்தகைய உலக இலக்கியங்களோடு ஒப்பிடும் முயற்சியால் சங்கத் தமிழின் தனித்துவம், சிறப்பு ஆகியவற்றை உலகிற்கு எடுத்துக்காட்ட முடியும், திறமையான புலமையெனில் அதை வெளிநாட்டார் வணங்கச் செய்தல் வேண்டும். இத்தகைய தொடர் முயற்சிகளின் வரிசையில் தமிழ்-ஜப்பானிய ஒப்பீட்டாய்வு இன்று பல படிநிலைகளைக் கடந்து வளர்ச்சி பெற்றுள்ளது.

சென்னைப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் டாக்டர் பொற்கோ அவர்களுடன் இணைந்து இன்று நூற்றாண்டு காணும் பேராசிரியர் சுசுமு ஓனோ எனும் ஜப்பானிய அறிஞர் நிகழ்த்திய ஆராய்ச்சிகள் சிறந்த ஆராய்ச்சி படிநிலைகளாக இத்துறைக்கு அமைந்தன. 1981 ஆம் ஆண்டு நிகழ்ந்த ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில் தமிழ், ஜப்பானிய சொற்களைப்பற்றி ஆய்வுக் கட்டுரை வழங்கினார். தமிழுக்கும், ஜப்பானியத்திற்கும் ஏறக்குறைய 500 சொற்களை எடுத்துக்காட்டி வியப்பில் ஆழ்த்தினார். முறையாக டாக்டர் பொற்கோ அவர்களிடம் தமிழ் கற்று தமிழ்-ஜப்பானிய ஆய்வுக் களத்தை விரிவாக்கினார். சொல் நிலையிலும், பொருண்மை நிலையிலும் பண்பாட்டு அடிப்படையிலும் தமிழுக்கும் ஜப்பானியத்திற்கும் உள்ள ஆய்வு முடிவுகளை வெளிப்படுத்தினார்.

1. *Sound Correspondence between Tamil and Japanese.*
2. *Cultural resemblance between Tamil and Japanese.*

தமிழின் யாப்பு வடிவங்களுக்கும். ஜப்பானிய யாப்பு வடிவங்களுக்கும் உள்ள தொடர்பினை புலமை என்ற ஆராய்ச்சி இதழில் கட்டுரைகளாக வெளியிட்டார். தமிழின் வளமான அக இலக்கிய மரபையும், புற இலக்கிய மரபையும் அறிந்த இவ்வறிஞர் மன்யோசு பாடல்களை தமிழில் மொழிபெயர்ப்பதற்காக தமிழர்கள் ஜப்பானிய மொழி கற்க முயற்சி எடுத்தார்.

அவ்வகையில் மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் ஜப்பானிய மொழி கற்று மான்யோசு இலக்கியங்களை கற்று அதனை தமிழில் மொழிபெயர்த்து காந்தளகம் வழி தமிழ்-மன்யோசு பாடல்கள் என ஒரு தொகுதியும் இதனை விரிவாக்கம் செய்து 2,350 மன்யோசு பாடல்களை ஜப்பானிய காதற் பாடல்கள் என கி.பி. 2000ல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடாக வெளியிட்டார். ஆனால் இதற்கு முன்பே பச்சையப்பன் கல்லூரி தமிழ் பேராசிரியர் இராம.குருநாதன் அவர்கள் ஆங்கில மொழி பெயர்ப்பின் வழி சங்கப் பாட்டும்

ஜப்பானிய கவிதையும் என வெளியிட்டார். ஜப்பானிய மன்யோசு அகப் பாடல்களை முதலில் தமிழில் மொழிபெயர்த்தவர் இராம. குருநாதன் அவர்களே.

சங்க இலக்கியம் பாட்டும் தொகையும் என தொகுக்கப் பட்டுள்ளதைப் போலவே மன்யோசு இலக்கியங்களும் தொகுக்கப் பட்டுள்ளன. இருபெரும் செவ்வியல் இலக்கியங்களின் மாபெரும் ஒப்பீடாகவும் இது அமையும். கி.பி. 4 முதல் 7 வரை தொகுக்கப்பட்ட மன்யோசு இலக்கியங்கள் நம் சங்க இலக்கியங்களைப் போலவே இயற்கையினையே மையமாகக் கொண்டவை. பருவகாலங்கள், உணர்வுகள், அகம், புறம், வாழ்க்கை போன்ற அடிப்படைகளிலேயே அமைந்துள்ளன.

'மன்யோசு" என்பதற்கு ஆயிரக்கணக்கான இலைத் தொகுப்பு பாடல்கள் என்று பொருள். 20 தொகுதிகளாகத் தொகுக்கப்பட்டுள்ள மன்யோசு கவிதைகளின் மொத்த எண்ணிக்கை 4,536 பாட்டுக்கள்.

இதில் "தங்கா" என்ற வடிவத்தில் 4,208 பாடல்களும் "சொகா" என்ற வடிவத்தில் 264 பாடல்களும், "செசொக" என்ற வடிவத்தில் 63 பாடல்களும் "புசொகசெக்க" என்ற வடிவத்தில் ஒரு பாட்டும் என இடம் பெற்றுள்ளன.

சங்க இலக்கியத்தில் கார்காலப் பாடல்கள் தனித்துவம் பெற்றவை. கார், கூதிர், இளவேனில், முதுவேனில், முன்பனி, பின்பனி என ஆறாகப் பகுத்தது சங்க இலக்கிய மரபு.ஆனால் ஜப்பானிய இலக்கிய மரபோ காலத்தினை நான்காக பகுத்தது, வேனில், கோடை, இலையுதிர், பனி என இவை அமைகின்றன. மன்யோசு கார்காலம் தொடர்பான பாடல்கள் நிறைய இடம் பெற்றுள்ளன. ஏறக்குறைய இரண்டு காலம் பற்றிய மரபுகள் ஒன்றுபட்டுத்தான் செல்கின்றன.

காலமாறுபாட்டைக் குறிக்கின்ற சொற்கள் மன்யோக பாடல்களின் தனிச்சொல்லாகவும் தொடராகவும் பயன்படுத்தப் பட்டுள்ளன.

தொல்காப்பியர் கார்காலம் பற்றி குறிப்பிடுகிறார்.
**காரும் மாலையும் முல்லை; குறிஞ்சி**
**கூதிர் யாமம் என்மனார் புலவர்** (தொல்.952)

கார் - பெரும்பொழுது மாலை சிறுபொழுது முல்லைத் திணைக்குரியது என வரையறை செய்கிறார்.

நற்றிணையில் உள்ள 115 வது பாடல் முல்லைத் திணைப்பாடல் இப்பாடலை இயற்றியவர் பெயர் தெரியவில்லை.

"பொருள் ஈட்டுவதற்கு பிரிந்த தலைமகன் கார் காலம் வருவதற்குள் வருவேன் என்று கூறிச் சென்றான். கார் காலம் இப்பொழுதுதான் தொடங்கியுள்ளது. நம் தலைவன் அயல் நாட்டில் வெகு தொலைவில் இருப்பினும் நம் மீது அன்புடையவர் எனவே தவறாது வருவார் என தலைவி தோழியிடம் கூறியதாக இப்பாடல் அமைந்துள்ளது.

*அகன்ற பொய்கையில் பூக்களைப் பறித்து வந்த தோழியர் அனைவரின் கோபம் தணியுமாறு அன்னை பெருமூச்சு விட்டாள். மேகங்கள் கடலில் உள்ள நீரினை தன் வாயினால் உண்டு வானிலே மழை பொழிந்தன. மயிலின் அடி போன்று மலர்ந்திருக்கும் நொச்சிப் பூவின் இலைகள் அடர்ந்த வேலியில் முல்லைக் கொடி படர்கிறது.*

*முல்லைப் பூக்கள் மலர்ந்து கார்காலம் வந்து விட்டதைச் சொல்கிறது. விடியலில் மழையும் பெய்கிறது. தம் காதலர் தொலைவில் உள்ள நாட்டில் இருந்தாலும் நம் மீது பேரன்பு உடையவர், கார்காலத்தில் வராமல் அங்கேயே தங்குபவர் அல்லர்" எனக் கூறுகிறாள்.*

***/மலர்ந்த பொய்கைப் பூக்குற்று அழுங்க /அயர்ந்த ஆயம்பண் இனிது படீஇயர்/ அன்னையும் சிறிது தணிந்து உயிரினள் இன் நீர்த்/ தடங்கல் வாயில் உண்டு சிலநீர் என,/ மயிலடி இலைய மாக்குரல் நொச்சி/ மனைநடு மெவைவொடு ஊழ்முகை அவிழ / கார் எதிர்ந்தான்றால் காலை; காதலர்/ தவச்சேய்நாட்டார் ஆயினும், மிகப் பேர்/ அன்பினர் - வாழி, தோழி! - நன் புகழ் /உலப்பு இன்று பெறினும் தவிநலர்/ கேட்டிசின் அல்லெனோ விசும்பின் தகவே ?/***

*கார்கால பருவம் வந்து விட்டது, தலைவனும் வந்து விடுவான் என்பதாக உள்ளது இப்பாட்டு. மன்யோசுவில் உள்ள கார்காலப் பாட்டு இந்த அடிப்படையிலேயே அமைந்ததாம். சில வேறுபாடுகளும் உள்ளன. பல ஒற்றுமைகளும் உள்ளன. பத்தாவது தொகுதியில் உள்ள 2089 பாடலில்,*

| | |
|---|---|
| *Amatution* | விண்நிலம் எனப் |
| *Fazinc no tokiyu* | பிரிந்த போதிருந்து |
| *Ama no pava* | விண்ணாற்றினது |
| *Lmukafi worite* | எதிர்க்கரை நிற்குமே |
| *Fitobosini* | ஓராண்டிலே |
| | |
| *Fufa taliafanu* | மறுமுறை இணையா |
| *Tumakofini* | மனையாள் காதல் |
| *Monoomotu fito* | பொருள் நினையும் அவன் |
| *Amanogavu* | விண்ணாற்றினது |
| *Yasunokaferna* | கடவை வெளியினைத் |
| *Arigayofu* | கடந்து திரும்பும் |
| *Yoyono watarini* | தலைமுறைக் கடப்பு |
| *Sofo fune no* | மண் புணையது |
| *Tumo nimo tenimo* | முன்னிலும் கடையிலும் |
| *Funa yosofi* | புணை தள்ளியே |
| *Makati sizenuki* | இருபுறம் சவள்தள்ளி |
| *Fala Susuki* | கொடி சுசுகி |
| *Moto famosoyoni* | அடி இலைச் செடியும் |
| *Akikaleno* | காரது காற்று |
| *Fukikuruyafini* | வீசி வரு இரவிலே |
| *Amanogava* | விண்ணாற்றினது |

*Siraname sinogi* வெண்ணலையும் எழுந்தே
*Oti tagitu* விழும் தளர்ந்தே
*Fayase watarite* நீர்ச் சுழலைக் கடந்தே
*Waka kusano* இளந்தளிரின்
*Tumaga temakuto* மனைவி கை அணைய
*Ofo fune no* நம் புணையில்
*Omoti tanomite* நினைந்து மகிழ்ந்துமே
*Kogikuramu* கடந்து வரும்
*Sono tuma no koga* நல் மனைவிக் காதலன்
*Aratamano* மணி ஆரத்தின்
*Tosi no wo nagaku* ஆண்டுமே நீண்டிருதே
*Omofikosi* நினைந்து வர
*Fofi wotuki samu* நல்வுற்றே சேர்ந்திடும்
*Farmitukiyoti* ஏழாம் மாதத்தின்
*Waremo Kanasaimo* ஏழாவது நாளிலே நாங்களும் வருந்துமே

*என்ற பாடல் நாங்களும் வருந்துகின்றோம். ஏழாவது மாதத்திலே ஏழாவது நாளிலே வருவேன் என்று சொல்லி பிரிந்து சென்றோம் காதலியை, காதலியின் பிரிவு காதலனின் மணியாரத்தைப் போல் நீண்டு பிரிந்து கொண்டே செல்கிறது. நினைவுகளோ ஆற்றிலே எழுந்து புரண்டு அடங்கும் அலைகளை ஒத்திருக்கின்றன. ஆற்றின் இக்கரையில் நானும் அக்கரையில் அவரும் என வாழ்வில் பிரிந்து நிற்கிறோம். கொடி சுசுகி அடி இலை செடிகள் நிறைந்துள்ள ஆற்றில் கார்கால இரவிலே நீரின் சுழலை கடந்து தலைவியின் கையை அணைத்து இருந்த நினைவுதனில் நீந்துகிறோம்.*

*'முல்லைக் கொடி கார்க்காலக் குறியீடுபோல், மன்யோசு பாடலில், "கொடி சுசுகி" கார்க்காலக் குறியீடாக அமைந்துள்ளது கருப்பொருள் ஒற்றுமையில் இரண்டும் மலர்கள்தான், முல்லைத் திணைப்பாடல் தலைவியினை மையமிட்டு வருகிறது, மன்யோசுப் பாடல் தலைவனை மையமிட்டு வருகிறது, இரு பாடல்களின் முக்கிய வேறுபாடு ஒன்று உள்ளது. மன்யோசு பாடலில், தலைவன் பெயர் "பிகொ பொகியன்" எனப் பெயர் தெளிவாக குறிக்கப் பெறுகிறது. முல்லைத் திணைப்பாடலில்,*

***மக்கள் நுதலிய அகணைந் திணையும்***
***சுட்டி ஒருவர் பெயர் கொளப்பெறாஅர் (. ..1000)***

*என்ற இலக்கிய மரபுக்கேற்ப தலைவியின் பெயர் அகப்பாடல்களில் குறிக்கப்படவில்லை. ஜப்பானிய இலக்கிய மரபிற்கும் சங்க இலக்கியத்திற்கும் உள்ள பெருத்த வேறுபாடு இது. சங்க மரபின் தனிச்சிறப்பும் இதுதான்.*

நல்ல மனைவியின் காதற் கணவனின் ஆரம் போல் கார் காலம் நீண்டு செல்கிறது, என்கிறது மன்யோசுப் பாடல். தலைவனின் ஒலியைச் சுட்டுகிறது. நற்றிணை முல்லைத் திணைப்பாடல் கார்கால வரவை மேகங்கள் மழையில் தெரிவிக்கின்றனர். நொச்சி இலைகள் மயிலடி போல் உள்ளன. அதன் மேல் படர்ந்திருக்கின்ற முல்லை அரும்புகளும் பூக்கத் தொடங்கி கார்கால வருகையினைச் சொல்கின்றன என தலைவி இருக்கின்றாள். நற்றிணை தலைவியின் உணர்வுநிலையும் மன்யோசு தலைவியின் உணர்வு நிலையும் ஒன்றுபட்டே செல்கின்றன. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம். இரண்டு செம்மொழி களஞ்சியங்களில் இரண்டு நெல் மணிகளே ஒப்பிடப்பட்டன. இன்னும் பல நெல்மணிகளாகிய பொன்மணிகள் ஒப்பீட்டுக்காக காத்திருக்கின்றன.

**தமிழ் மொழியும் ஜப்பானிய மொழியும்**

தமிழ்மொழியின் வேற்றுமை உணர்த்தும் தன்மைக்கும் ஜப்பானிய மொழியிலே வேற்றுமை உணர்த்தும் தன்மைக்கும் நெருங்கிய ஒற்றுமை காணப்படுகிறது. இரு மொழிகளுமே ஒட்டுமொழியாகையால் பெயர்ச் சொல்லுடன் பல உருபுகள் அல்லது பின்னொட்டுகள் (இவை ஆங்கில Posttixes அல்லது Postpositions ஆகும்) சேர்ந்து வேறுபட்ட பொருள்களை உணர்த்துகின்றன. உதாரணமாக ஜப்பானிய 'னி' உருபினையும் தமிழ் "இன்" உருபினையும் எடுத்துக் கொள்வோம்.

அ) இவ்விரண்டும் பெயர்ச் சொற்களைத் தொடர்ந்து செயல் நடைபெறும் இடத்தினைக் குறித்து நிற்கும் உதாரணங்கள் பின்வருமாறு.
தமிழ்: "நீர் திகழ் சிலம்பின் ஓராங்கவிழ்ந்த வெண் கூதாளம்" (. 282)
ஜப்பான்: 'மிஹீனெனொ யமனி இரு குமோ (மன்யோசு 50) (
தமிழில்): மஹீனெ மலையின் இருக்கும் முகில்
(ஆ) இரண்டும் காலத்தினையுணர்த்தும் சொற்களுக்குப் பின்னே இடம் பெறுகின்றன.
தமிழ்: அவ்வெண் நிலவின் எந்தையும் உடையோம் (புற 112)
ஜப்பான்: த்ஸீகு யொமினொ ஹிக்கரினி (மன்: 252)
(தமிழில்) திங்களுடைய ஒளியின் (நீ) வருக

**சங்க இலக்கிய நற்றிணை மன்யோசு பாடல்கள் ஒப்பீடு**

பாடல்: 2059

| | |
|---|---|
| *Ama no gava* | விண்ணாற்றினிலே |
| *Nami vatatu tomo* | அலை எழுந்திடினும் |
| *Waga tune va* | எனது புணை |
| *I so kogiidemu* | வெளியே தள்ளிச் செல்லும் |
| *Yo no tukenu mani* | இராஆழ மாகும்முன் |

**விளக்கம்**

விண்ணாற்றினிலே அலை எழுந்திடினும், நான் இரவு வளர்ந்திடு முன்னே எனது புணையை வெளியே தள்ளிச் செல்லும்.

பாடல்: 2087

| | |
|---|---|
| *Watarimori* | கடவைக் காவல |
| *Funade so idemu* | புணை தள்ளி வருவாய் |
| *Koyotinomi* | இன்றிரா மட்டும் |
| *Atimite notiva* | இணைந்திட்ட பின்னரே |

*Atazi mono kamo* இணையாப் பொருள் கொல்

**விளக்கம்**

கடவைக் காவலனே, விரைவிலே புணையைத் தள்ளி வந்திடுவாய் நான் இன்றிரவு மட்டும் அவளுடன் இணைந்திட்டுப் பின்னரே இணைந்திட முடியாத பொருள் ஆவேன் என்ற இருபாடலிலும் இரவிலே தலைவன் தலைவியைக் காண வரும் துயர நிலை வெளிப்படுகிறது.

**திணை: முல்லை**

துறை: இது, வினைமுற்றி மீள்வான் தேர்பாகற்குச் சொல்லியது

விரைப்பரி வருந்திய வீங்குசெலல் இளையர்
அரைச் செறி கச்சை யாப்பழித் தசைஇ
வேண்டமா நடையர் மென்மெல வருக
தீண்டா வைமுள் தீண்டி நாம்செலற்கு
ஏகமதி வலவ தேரே உதுக்காண்
உருக்குறு நறுநெய் பால் விதிர்த் தன்ன
அரிக்குரல் மிடற்று அம்நுண் பல் பொறிக
காமரு தகைய கான வாரணம்
பெயனீர் போகிய வியனெடும் புறவிற
புலரா வீர் மணல் மலிரக கெண்டி
நாளிரை கவர மாட்டித் தன்
பேடை நோக்கிய பெருந்தகு நிலையே (நற். 21)

நற்றிணை 21-ம் பாடல் முல்லைத் திணைப் பாடலில் தலைமகன் தலைவியை பொருள் தேட பிரிந்து சென்று மீண்டுவரும் நிலையினை இப்பாடலோடு ஒப்பிடலாம். அவிழ்ந்த தன் வேட்டியினை இழுத்து கட்டிக் கொண்டு, தீண்டாத முள்ளினை குதிரை மீது தீண்டி தேர் ஓட்டும் பாகனை நோக்கி தலைவன் கூறுகிறான், அதோ அந்த காட்சியினைப் பார். உருகிக் கொண்டிருக்கும் நெய்யின் மேல் பாலை உதிர்த்தால் என்ன ஓசை கேட்குமோ அந்த ஓசை எழுப்பும் வான் கோழி மணல் வெளியை, கிண்டி, கிளறி இரையை தன் கூரிய அலகால கொத்தி தான் உண்ணாமல் தன் துணைக்கு ஊட்டும். அதைப் போல தலைவியுடன் இணையவேண்டும் விரைவாகச் செல் என்கிறான். தலைவியுடன் இணைந்திருக்க வேண்டும் என்ற உணர்வு நிலை மேற்கண்ட பாடல்களில் விளங்குவதை அறிய முடிகிறது.

**வறுமை பற்றிய உரையாடல் மன்யோசு பாடல்**

இரவில்
பின்னிய காற்றால்
மழை பெய்யும்.
பனித்துளிகள் குவியும்
கடுங்குளிரை
ஊசிபோல் உணர்கிறேன்
உப்புக் கட்டியை
கவ்வுகிறேன்
இருமல், முனகல்
என்னை உலுக்குகிறது.

வறுமையிலிருந்து
என்னைக் காப்பாற்ற
எந்த தகுதியானவர்களும்
இல்லை
நடுங்கிய நான்
கையில் கோலுடன்
உடைகளை கூட
அணிய முடியவில்லை.

கசப்பான குளிர் இரவும்
என்னை விட
கடும் வறுமையில்
என்னைச் சுற்றி
சுற்றத்தார்
பசியுடன் பலர்
மனைவி பிள்ளைகளுடன்
அழுகிறார்கள்.

**சிறுபாணாற்றுப்படை - பத்துப்பாட்டு: வறுமை**

திறவாக் கண்ண சாய்செவிக் குருளை
களவாப் பால்முலை கவர்தல் நோனாது
புனிற்றுநாய் குரைக்கும் புல்லென் அட்டில்
காழ் சோர் முதுசுவர்க கணச்சித லரித்த
பூமி பூத்த புழற்கா ளாம்பி
ஒல்குபசி உழந்த ஒடுங்கு நுண் மருங்குல்
வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைத்த
குப்பை வேளை உப்பிலி வெந்ததை
மடவோர் காட்சி நாணிக கடையடைத்து
இரும்போ ஒக்கலொ டொருங்குடன் மிசையும்,
அழிபசி வருத்தம் வீடப் பொழிவுகள்
தறுகண் பூட்கைத் தயங்குமணி மருங்கிற்

சிறுகண் யானையொடு பெருந்தோ எய்தி
யாமவ ணின்றும் வருதும் நீயிரும்,
இவணயந் திருந்த இரும்பேர் ஒக்கல்

இரவலனே! யாங்கள நல்லியக் கோடனையும் அவன் தந்தையின் மலையிடத்தேயுள்ள செல்வத்தையும் பாடிச் சென்றோம்.அப்பொழுது நமது வறுமை சொல்லுக் கடங்காததாக இருந்தது. நமது வீட்டில் தாயின் முலை உண்ணாமல் இருக்க மாட்டாத நாய்க்குட்டிகள் பசி மிகுதியால் சத்தமிட்டன. அடுக்களையின் இறப்புத் தடிகள் கட்டறுந்து கீழே விழுந்தன. சுவரில் எழுந்த கரையான் வீட்டின் வரிச்சுகளை உண்டது. ஒடுங்கிய நுண்ணிய இடையும் வளையலணிந்த கையும் உடையவளும் பசியால் வருந்துகின்றவளுமாகிய கிணையனுடைய மகள் குப்பையினின்றும் நகத்தினாற் கிள்ளிய கீரையை உப்பில்லாமல் சமைத்துக் கரிய சுற்றத்துடன் பசி நீங்கும்படி உண்டாள். இவ்வகையான கொடிய வறுமையும் பசியும் இனி நமக்கு ஒரு போதும் இல்லையாகும்படி நாம் மதஞ் சொரியும் யானைகளையும் பெரிய தேரையும் பெற்று அவ்விடத்தினின்றும் வருகின்றோம்.

**இலக்கிய ஒப்பீடு**

**குறுந்தொகை**

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரளவின்றே சாரல்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனோடு நட்பே. (குறுந். 31)

**மன்யோசு பாடல்**

வேனிற் புல்லது
நெருக்கம் என் காதலே
பெருங் கடல்
கரைபுரள் அலையின்
ஆயிரம் அடுக்காகும் (மன். 1927)

**குறுந்தொகை**

யாம் எம் காதலர்க் காணேம் ஆயின்
செறாதுளி பெருகிய நெஞ்சமொடு பெருநீர்க்
கல்பொரு சிறு நுரை போல,
மெல்ல மெல்ல இல்லாகுதுமே (குறுந். 290)

**மன்யோசு பாடல்**

*ஒன்பதாம் மாதம்*
*தோன்றிடும் நிலவு போல*
*தொடர்ச்சியாயும்*
*நீ வராதிருப்பினே*
*நான் நலிந்திடலாமா (மன். 2300)*

**தமிழ் அகத்திணையும் மன்யோசும்**

*தமிழ் அகத்திணை மரபில் மன்யோசு இலக்கியங்களை விட தமிழ் அகத்திணை மரபு வளமானது. தொல்காப்பிய பொருளதிகாரம் அகத்திணை வழி உரிய இலக்கியங்களை உருவாக்குகின்ற இலக்கிய கொள்கைகளாக விளங்குகின்றன.*

*சங்க இலக்கிய அகப்பாடல்களுக்கு அகத்திணை இலக்கண மரபு இருப்பது போன்று ஜப்பானிய மன்யோக இலக்கியத்திற்கு இலக்கண மரபு இருப்பதாக தெரியவில்லை. ஆனால் நம் அகத்திணை மரபினை மன்யோக அகப்பாடல்களுக்கு பொருத்திப் பார்க்க முடியுமா என ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். அவ்வகையில் தொல்காப்பிய அகத்திணை நெறியினை மன்யோசு இலக்கியத்திற்கும் ஒப்பிட முடியலாம். நிலமும் பொழுதும், முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் குறித்த செய்திகளோடு ஒப்பாய்வு செய்யலாம்,*

**முதல்எனப் படுவது நிலம்பொழுது இரண்டின்**
**இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே** *(தொல். 950)*

*பாட்டிற்கு அடிப்படை நிலமும், பொழுதும் என்பது, அது நான்கு வகைப்படும். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியவற்றில் பாலை மட்டும் நீங்கலாக ஏனைய நான்கு திணைகளுக்கும் நிலம் பொழுது உள்ளது.*

*அவற்றுள்,*

**நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப்**
**படுதிரை வையம் பாத்தியல் பண்பே.**

*பாலைக்கு பிரிவென்ற உரிப்பொருளே அடிப்படையாக அமைகிறது. ஆனால் சங்க இலக்கியத்தில் பாலை தொடர்பான பாடல்களே அதிகமாக இடம் பெற்றுள்ளன. ஜப்பானிய இலக்கியத்திலும் பிரிவு தொடர்பான பாடல்களே அதிகமாக உள்ளன. இரு இலக்கியங்களிலும் உள்ள ஒற்றுமைத் தன்மையை குறிக்கிறது. மேலும், நிலம் பற்றி அறிஞர் தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு என்ற நூலில்,*

***சங்க இலக்கியம் நில அடிப்படையில் திணைப் பாகுபாடு பெற்றதற்கு இந்நாளில் வளர்ச்சியே காரணமாகும். ஐந்தாவதாக பாலை நிலம் என்றும் ஒன்று அமைந்தது, முல்லை குறிஞ் சியின் எல்லையோரப் பகுதிகள் மேட்டு நிலமும் பாறைகளுமாய் கோடைக் காலத்தில் வறட்சியுற்று பாலை வடிவைப் பெறுகின்றன.அவை மீண்டும் கார்காலத்தில் தளிர்த்து முன்னைய குறிஞ்சி, முல்லை வடிவாக மாறுகின்றமையால் பாலையை தனி நிலமாக நம் முன்னோர் கொண்டிலா. எனவே பாலையை மட்டும் நில அடிப்படையிலான திணை என்பதை விட கால அடிப்படையிலான திணை என பாலைத்திணையைக் கூறலாம். (ப.213)***

என்ற கூற்றுப்படி பாலைத்திணை உரிப்பொருள் பிரிதல் (கால அடிப்படைப் புலவர்கள்) பாலை பாடிய பெருங் கடுங்கோ என இத்திணையினை சிறப்பாக ஒரு புலவர் பாடியுள்ளார். மேலும் தொல்காப்பியர் ஒட்டகம் பற்றி குறித்திருப்பது சிந்திக்கத்தக்கதாகும்.

**ஒட்டகம் குதிரை கழுதை மரை இவை**
**பெட்டை என்னும் பெயர்க் கொடைக்கு உரிய ( தொல்.1552)**

ஒட்டகம், குதிரை, கழுதை, மரை என்பன பெட்டை என அழைக்கப்பட்டதை ஒட்டகம் பாலை சிந்திக்க வேண்டிய ஒன்று.

மன்யோசு பாடல்களில் பல புலவர்கள் பாலை பிரிவுத் திணையை சிறப்பாக புனைந்துள்ளனர். அகநானூற்றிலே 200 பாடல்கள் பாலைத் திணை அகத்திணைப் பாடல்கள் 1862இல் 378 புலவர்கள் பாடியுள்ளனர். இவற்றுள் பாலைத் திணை பற்றி பாடல்கள் 531 பாடல்கள். இதனை 183 புலவர்கள் பாடியுள்ளனர்.

நற்றிணையில்-105. குறுந்தொகை-90, அகநானூறு-100. கலித்தொகை-35, அகநானூறு-200, பத்துப் பாட்டு-1 என 531 பாடல்களை பாலைத்திணை *Origin of Palai* என *Palaittinai in Sangam Literature* என்ற நூலில் டாக்டர் R.K. நாகு வகைப்படுத்துகிறார். மேலும் இவர் பேராசிரியர் தனிநாயகம் அடிகள் கருத்தினை மேற்கொள் காட்டுகிறார்

*"i do not believe that "pala" was included in the first and original classification because "palai as seen does not exist in the Tamil country and when its does occur is only of a temportary duration lons as the summer and no more" (p.3)*

காலம் (பருவம்) தொடர்பான கருத்துக்கள் சங்க-ஜப்பானிய காதற் பாடல்களில் ஒப்பிடலாம். இளவேனில், முதுவேனில் என்று வேனிற்காலம்
**கார் கூதிர் என்ற மழைக் காலம்**
**முன்பனி பின்பனி என்ற பனிப்பருவம்**

வேனில், மழை, பனி மூன்று காலங்களில் ஆறு பிரிவுகள் சங்க இலக்கியத்திற்கு உரியவை.

ஜப்பானிய இலக்கியத்திலும் காலம் பற்றிய பிரிவுகள் பொருந்தி வருகின்றன. ஒரு ஆண்டினை ஆறாகப் பிரித்தது போலவே ஒரு நாளினை ஆறு கூறாக பிரிப்பது தமிழின் நுண்ணிய அகத்திணை மரபு, வைகறை, காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம் என்ற ஆறு சிறு பொழுதுகளும் சங்க இலக்கிய உருவாக்கத்திற்கு பெரிதும் அடிப்படையிலானவை.

மேற்சொன்ன நிலம், காலம் என்ற அடிப்படையில் சங்க ஜப்பானிய காதற்பாடல்களுடன் ஒப்பிட்டு ஆராயலாம். இன்னொன்றுடன் ஒப்பிடும் பொழுதுதான் நம்முடைய சிறப்பும் சங்க இலக்கியத்தின் சிறப்பும் தெரிய வரும். மேலும்,

**மக்கள் நுதலிய அனைந் திணையும்**
**சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறார்**

என்ற மரபு உலக இலக்கியங்களில் சங்க இலக்கியத்திற்கென்றே பெரிதும் போற்றப்படும் மரபு. மன்யோசு இலக்கியங்கள் பொருத்திப் பார்த்திட முனையலாம்.

தொகுப்பாசிரியர்கள் இவ்வாறு தொகுத்தார்களா அல்லது புலவர்கள் எழுதும் போதே இவ்வாறு எழுதப்பட்டிருக்குமா? என்பது அடிப்படையான கேள்வி. சங்க இலக்கியங்களோ, மன்யோசு இலக்கியங்களோ தொகுக்கப்பட்ட இலக்கியங்கள். இரண்டு தொகுப்பு வரலாற்று அடிப்படையில் ஆராய்ச்சிகள் நிகழ்த்தப் பெற்றால் பல உண்மைகள் தெரிய வரும்.